ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2159/2 - 2020 ජනවාරි මස 20 වැනි සඳුදා - 2020.01.20

*2159/2 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 13/1978* (iii).

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

44 ஆம் உறுப்புரையின் (5) ஆம் பந்தியின் கீழான அறிவித்தல்

அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (5) ஆம் பந்தியினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரான பந்துல குணவர்தன ஆகிய நான், இவ்வறிவித்தலின் மூலம், இதற்கான அட்டவணையின் நிரல்கள் I, II மற்றும் III என்பவற்றில் குறித்துரைக்கப்பட்டவாறான, 2019, திசெம்பர் மாதம் 10 ஆந் திகதிய 2153/ 12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் நியதிகளின்படி எனக்குக் குறித்தளிக்கப்பட்ட அத்தகைய விடயங்களும் பணிகளும் தொடர்பான தத்துவங்களையும் கடமைகளையும், (அமைச்சரவையின் உறுப்பினரொருவராகவிராதவரும்) 2019, திசெம்பர் 21 ஆந் திகதிய 2154/ 55 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் நியதிகளின்படி நியமிக்கப்பட்டவருமான தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சரான திலங்க சுமதிபால அவர்களுக்குக் கையளிக்கின்றேன்.

பந்துல குணவர்த்தன,
உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க .அமைச்சர்.

கொழும்பு,
2020, சனவரி 16.

**அட்டவணை**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள்* |
| 1. அறிவை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார அபிவிருத்திக்காக விஞ்ஞானம், தொழில்நுட்பவியல் மற்றும் புத்தாக்கங்களைச் சீராக்குதல் மற்றும் தொடர்புபட்ட ஆராய்ச்சி நிறுவனங்களுடன் தகுந்த இணக்கத்தைப் பேணுதல் | 1. இலங்கை உயர் தொழில்நுட்பவியல்சார் கல்வி நிறுவகம்<br>2. தேசிய விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் ஆணைக்குழு | 1. 1995 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, இலங்கை உயர்தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகச் சட்டம் |

1A - G 31832 — 392 (2020/01)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* <br> *கடமைகளும் பணிகளும்* | *நிரல் II* <br> *திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்* | *நிரல் III* <br> *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள்* |
|---|---|---|
| 2. விஞ்ஞான, தொழில்நுட்ப, சமூக மற்றும் பொருளாதார ஆராய்ச்சி மற்றும் அபிருத்திசார் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கான வழி முறைகளை மேற்கொள்ளல் | 3. நவீன தொழில்நுட்பவியல்களுக்கான ஆதர் சீ கிளார்க் நிறுவகம் | 2. 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்வியல் அபிவிருத்திச் சட்டம் |
| 3. நெனோ, ரோபாசார், பொறிமுறை இலத்திரனியல் மற்றும் உயர் தொழில்நுட்பவியல் உட்பட, கண்டு பிடிப்புக்கள் மற்றும் புதிய ஆராய்ச்சிகள் மற்றும் கண்டு பிடிப்புக்களின் அடிப்படையிலான அறிவு பற்றிய தகவல்களை, தொழிற் சமுதாயத்தினருக்குட்பட்ட இயைபான அக்கறை கொண்டுள்ளோருக்கு வழங்குதல் | 4. இலங்கைப் புத்தாக்குநர் ஆணைக்குழு | 3. 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, இசைந்தொழுகுகை மதிப்பீட்டுக்கான இலங்கைத் தராதர அங்கீகார சபைச் சட்டம் |
| 4. இயைபான வேறு நிறுவகங்களுடன் ஒருங்கிணைவதன்மூலம் புதிய கண்டுபிடிப்புக்கள் தொடர்பில் சமுதாயத்தினரை வழிகாட்டுதல் மற்றும் ஊக்குவித்தலுக்கான வழிமுறைகளை மேற்கொள்ளல் | 5. இலங்கைப் புத்தாக்குநர் நிதியம் | 4. 1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைப் புத்தாக்குநர் ஊக்குவிப்புகள் சட்டம் |
| 5. தோற்றுவிக்கும் பொருளாதாரத்துக்கு ஆதரவளிப்பதற்குத் தேசிய புத்தாக்க முயற்சிகளை ஆரம்பித்தல், நிதியளித்தல் உயர் தொழில்நுட்பவியல் தொழில் முயற்சிகளுக்கு வசதியளித்தல் மற்றும் புத்தாக்கத் தொழில் முயற்சிகளுக்கான முதலீட்டுக் கொள்கைகளினதும் மூலோபாயங்களினதும் வினைத்திறனைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் | 6. விஞ்ஞானம், தொழில்நுட்பவியல் மற்றும் புத்தாக்கத்துக்கான ஒருங்கிணைக்கும் செயலகம் | 5. 2019 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, தேசிய புத்தாக்க முகவராண்மைச் சட்டம் |
| 6. விஞ்ஞானம், தொழில்நுட்பவியல் மற்றும் புத்தாக்கங்களை சமுதாயத்தினருக்கு அறிமுகம்செய்தல் மற்றும் தொடர்புடைய தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல் | 7. நீலப் பசுமை விருத்திச் செயலகம் | |
| 7. இலங்கையில் பணியாற்றுகின்ற அனைத்து ஆராய்ச்சி நிறுவனங்களுடனும் ஒருங்கிணைவதன் மூலம் தேசிய அபிவிருத்திக் குறிக்கோள்களை எய்துவதற்கு முனைப்பாகப் பங்களித்தல் | 8. வெட்டுமரச் செய்முறைப் புத்தாக்க நிலையம் | |
| 8. சர்வதேச விஞ்ஞான, தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒருங்கிணைதல் மற்றும் ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல். | 9. ரொபோசார் பிரயோகங்களுக்கான மேன்மைதங்கிய நிலையம் | |
| 9. பல்வேறு நாடுகளுடன் இரு தரப்பு மற்றும் பல் தரப்பு ஒத்துழைப்பினூடாக விஞ்ஞான, தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதன் மூலம் பொருளாதார முன்னேற்றத்தை எய்துதல் | 10. விதாதா நிலையங்கள் | |

02-03